முருகப்பெருமான் துணை

**மகான் திருவள்ளுவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.05.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான சூட்சுமமே
ஓங்கார குடில் படைத்து அருளும்
ஓங்காரனே ஞான தேசிகனே
ஓதிடுவேன் உன் பெருமை கூறி அருளாசி
2. ஆசிதனை சுபகிருது தகர் திங்கள்
அறிவிப்பேன் இருபான் திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 20ம் நாள், 03.05.2022 செவ்வாய்கிழமை) வாசிவென்ற அரங்கன் கேட்க
வழங்குவேன் திருவள்ளுவர் யானும்
3. யானுரைக்க உண்மை தருமம்
உயர்வு தருகின்ற தடமாக
ஞானதேசிகன் சபை இருக்க
நம்பிக்கை வைத்து சரணடைய
4. சரணடைய சகல வகைதனிலும்
சற்குருவாய் அரங்கன் நிழல்
அரணாகப் பாதுகாத்து வரும்
ஆற்றலாக வழிகாட்டி நிற்கும்
5. நிற்கவே எங்கும் எதிலும்
நிலைத்தன்மையை தரவல்ல
அற்புதமும் மகத்துவமும் தரும்
அரங்கமகானுள் எந்தன் ஆசியும்
6. ஆசியும் வேதமாக நிறைந்து
ஆக்கம் ஊக்கமாக இருக்க
பேசிட ஓங்கார குடில் நோக்கி
பூவுலகோர் வந்தாலே போதும் என்பேன்
7. என்கவே மெய்நெறி பற்றி
எதிலுமே தயவை பெருக்கி
துன்பமில்லா வாழ்வாக மக்கள்
தேசிகனார் ஆசிபட வாழ நேரும்
8. நேருமை கொண்ட மக்கள் சமூகம்
நிலவுலகம் கண்டடைந்து வர
பெருமை மிக்க தலைமைகளும்
பொருள்பற்றிலா அதிகார வர்க்கமும்
9. வர்க்கமும் ஞானத் தேற்றமாகி
வளர்ச்சிமிக்க சேவைகளாகும்
தர்க்கம் கலகம் துன்பமில்லா
தருமவான்கள் தவசிகள் நிறைந்த

10. நிறைந்த ஞான பூமியாகி
நிலவுலகம் மாற்றம் காணும்
குறைந்த நிலை கூடி பேரிடரில்லா
குவலயமே நல்ல பாதுகாப்பை காணும்

11. காணவே அரங்கனே கலியில் (கலியுகத்தில்)
கந்தவேலன் அவதார ஞானி
ஞானவான்கள் அணுகி புடைசூழ
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி உருவாகும் அருளாசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

உலகத்தில் துறையூர் ஓங்காரக்குடில் அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில் நடைபெறும் அன்னதானமே உண்மை தர்மம் என்று மகான் வள்ளுவப்பெருமான் மகிழ்ந்து பாராட்டி குறிப்பிட்டுள்ளார்கள்.

எப்பொழுதும் நிலைத்து நிற்கக் கூடிய உண்மை நெறியையும், அற்புதங்களையும், உலகத்திற்கு வழிகாட்டும் உபதேசங்களையும் அருளி வரும் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளின் உள்ளத்தில் மகான் வள்ளுவப்பெருமான் வேதமாகவும், ஆக்கமாகவும், ஊக்கமாகவும் நிறைந்து தங்கியிருந்து அருள்பாலித்து வருகிறார். ஓங்காரக்குடிலாசான் வீற்றிருக்கும் ஓங்காரக்குடிலுக்கு வந்து அவரது ஆசியைப் பெற்றாலே போதும். ஓங்காரக்குடிலாசானின் உபதேசமான உண்மை நெறியான தயவுநெறியை பின்பற்றியும், தயவையும் பெருக்கி வந்தால் துன்பமில்லாத வாழ்வை பெறலாம்.

நாட்டை ஆளும் தலைமைகளும் அதிகார வர்க்கமும் ஓங்காரக்குடிலாசானின் ஆசியைப் பெற்றால், நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக, கலகமில்லாத ஞானஆட்சியை இவ்வுலகினில் கொண்டு வரலாம். இப்படிப்பட்ட ஞானஆட்சியில் இவ்வுலகம் பேரிடரில்லா பாதுகாப்பை பெறும்.

உலக நன்மைக்காகவே அவதரித்தவர் முருகப்பெருமான். மகான் முருகப்பெருமானின் ஆசியைப் பெற்றவர்தான் வள்ளுவப்பெருமான். அவரே பிரம்மா, திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெரும் தேவரும் ஆவார். வள்ளுவப்பெருமானை உலக ஞானத்தலைவனாக போற்றி வணங்க வேண்டும்.

1. மனித குலத்தின் மாண்புடைய ஆசான்
புனிதனாம் வள்ளுவனை போற்றி மகிழ்வோம்.

2. எந்தை வள்ளுவன் இணையடி போற்றிட
சிந்தை தெளிய சிவபதம் ஆவாரே.

3. அம்மை வள்ளுவன் அருளினைப் போற்றிட
நம்மையும் காத்து நாட்டை ஆள்வார்.

4. ஆற்றலாம் வள்ளுவன் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

5. முத்தமிழ் வித்தகன் முனிவன் வள்ளுவனை
நித்தமும் நினைத்திட நிலைக்கும் சித்தியே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.